## கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைத்திடுக!

# கும்பகோணம் - நீலத்தநல்லூர் சாலையை 7 மீட்டர் அளவில் அகலப்படுத்துக!

## சட்டப்பேரவையில் கும்பகோணம் தொகுதி உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் கோரிக்கை!

சென்னை, ஜூன் 30- சட்டப்பேரவையில் கும்பகோணம் தொகுதி உறுப்பினர் சாக்கோட்டை க. அன்பழகன் பேசுகையில், கும்பகோணம் - நீலத்தநல்லூர் சாலையை 7 மீட்டர் அளவில் அகலப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய மூவருடைய மொத்த வடிவமாக, இந்தியா முழுமைக்கும் தெளிவான, திட்டவட்டமான, உறுதியான திராவிட மாடல் தத்துவத்தை தந்து கொண்டிருக்கிற திராவிட மாடல் நாயகர் அருமைத் தலைவர் எங்கள் தளபதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நன்றியுணர்ச்சியோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்பிற்குரிய சின்னவர், நாளை இயக்கத்தையும், இந்த அரசையும் வழிநடத்தவிருக்கும் மன்னவர் அவர்களையும் நான் இன்றைக்கு வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களையும், அவை முன்னவர் அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும், அரசுக் கொறடா அவர்களையும், மாமன்ற பேரவை உறுப்பினர்களையும் நான் வணங்குகிறேன். மேலும், சாதி மத வேறுபாடுகள் கடந்து, என்மீது அளவற்ற பாசத்தைக் கொட்டுவதோடு, தொடர் வெற்றியை தந்து, என்மீது நம்பிக்கை வைத்துள்ள எனதருமை கும்பகோணம் தொகுதி மக்கள் அனைவரையும் இந்த நேரத்தில் வணங்குகிறேன்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கட்டடங்கள் (பொதுப் பணித் துறை), சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை ஆகிய நான்கு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் என்னுடைய கருத்துகளை நான் பதிவு செய்ய விழைகிறேன்.

பொதுப் பணித் துறையானது நீர்வள ஆதாரத் துறை மற்றும் கட்டடமைப்பு என இரு அமைப்புகளாக செயலாற்றி வருகிறது. பொதுப் பணித் துறை கடந்த 174 ஆண்டுகளாக அரசுக் கட்டடங்கள், கட்டுமானம், பராமரிப்புப் பணிகள், நினைவுச் சின்னங்கள் மற்றும் சேவைக் கட்டடங்கள் போன்றவற்றில் தொழில்நுட்பத் திறமைக்கு ஒரு சிறந்த சான்றாக விளங்குகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் வரை பொது மராமத்துத் துறை என்று பெயர் பெற்றிருந்த இந்தத் துறை தற்போது பொதுப் பணித் துறை என்று அருமையான தமிழ்ப் பெயரால் அழைக்கப்படுகிறது.

அப்போது பொதுப் பணித் துறையின் அமைச்சராக முதன்முதலாகப் பொறுப்பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கலை நுணுக்கங்களில் கொண்டிருந்த தனி ஆற்றலின் காரணமாக பல பணிகளை மிகச் சிறப்பாக நிறை வேற்றினார்கள். 1968 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பகோணம் மகாமகப் பெருவிழாவின்போது, முன்னதாகவே வந்து தங்கியிருந்து, அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனை செய்து, கும்பகோணத்தில் ஒரு ring road அமைத்து, இணைப்புச் சாலையையும் ஏற்படுத்தி, அந்த மகாமகப் பெருவிழாவை மிகச் சிறப்பாக நடத்தி, ஆன்மிக மக்களின் மனதில் இடம்பிடித்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அதேபோன்று, இன்றைய முதலமைச்சர் அவர்கள், மகாமகப் பெருவிழா வருவதற்கு முன்பு, எங்கள் கோரிக்கையை ஏற்று, மாசி மகத்திற்கு அரசு உள்ளூர் விடுமுறை வழங்கி, ஆன்மிக மக்களிடம் ஒரு நிலையான புகழைப் பெற்றுள்ளார் என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய பொதுப் பணித் துறை ஆனமைச்சர் அவர்களும், நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக மிகச் சிறப்பாக மிகுந்த துடிப்போடு பணியாற்றி வருகிறார்கள், அவர்களை இந்நேரத்தில் நான் வாழ்த்துகிறேன்.

தமிழ்நாட்டில் நீர் சேகரிக்கும் தொன்மை வாய்ந்தபலநீர்த்தேக்கங்களையும், பல தடுப்பணைகளையும் கட்டியது இந்தத் துறை. அறிஞர் அண்ணா நினைவிடம்,



முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம், அதன் எதிரில் சென்னைப் பல்கலைக்கழகக் கட்டடம், பொதுப் பணித் துறையின் தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வள்ளுவர் கோட்டம் உட்பட பல்வேறு கட்டடங்களைக் கட்டியது பொதுப் பணித் துறை.

திராவிட நாயகர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் சென்னை கிங் நிறுவன வளாகத்தில் தரைத் தளம் மற்றும் 6 தளங்களுடன் 240 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை, மாமதுரை திருநகரில் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் மிக பிரம்மாண்டமாகக் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம், தமிழனுடைய வரலாறு 3,600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதற்கான ஆதாரங்களைக் கொண்டு கீழடி அருங்காட்சியம் முதலான பல பிரம்மாண்டமான கட்டடங்களைக் கட்டி, இன்றைக்கு திராவிட மாடல் அரசு என்பதை பேரவையில் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் உட்பட பல்வேறு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டட வளாகங்களை மிகச் சிறப்பாகக் கட்டித் தந்திருக்கிறது இந்தப் பொதுப் பணித் துறை.

கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய 'கும்பகோணம் மாவட்டம்' அமையும் வேளையில், கும்பகோணம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தை கட்டப் போவதும் இந்தப் பொதுப் பணித் துறைதான் என்பதை எண்ணி, அதற்காக முன்கூட்டியே எனது மனமார்ந்த நன்றியை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். பிரிக்கப்படாத வருவாய் மாவட்டங்களில் 8 சட்டமன்றத் தொகுதிகள், 9 வருவாய் வட்டங்கள் கொண்ட பெரிய மாவட்டமாக தஞ்சாவூர் திகழ்கின்றது. இதன் எல்லைப் பகுதியில் வசித்துவரும் பொது மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், சுமார் ஒன்றரை மணி நேரம், இரண்டு மணி நேரம் கடந்துதான் செல்ல வேண்டும். மாமன்னன் இராஜராஜ சோழன் ஆட்சி புரிந்த கும்பகோணத்தில், தமிழ் இலக்கியங்களை மீட்டுத் தந்த தமிழ்த் தாத்தா உ.வே.சா., இன்று வரையிலும் கணிதத் துறையில் உலகமெங்கும் பேசப்படும் கணித மேதை இராமானுஜம், வெள்ளிநாக்கு படைத்த சீனிவாச சாஸ்திரி, வரலாற்றுத் துறை பேரறிஞர் சதாசிவ பண்டாரத்தார் ஆகியோர் வாழ்ந்த இடம் கும்பகோணம்.

### ஆன்மிக மக்கள், நம்பிக்கை கும்பகோணம்

உலகில் வாழும் இலட்சக்கணக்கான ஆன்மிக மக்கள், தங்கள் நம்பிக்கையின் அடிப்படையிலான பரிகாரங்களுக்கும், வேண்டுதல்களுக்காகவும், கும்பகோணம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்திருக்கிற நவக்கிரக திருக்கோயில்களுக்கு வெளி நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் ஆண்டு முழுவதும் வரும் அனைவருக்கும் பல்வேறு வசதிகள் செய்துக் கொடுக்கப்படுகின்றன.

கும்பகோணம் நகரத்தைச் சுற்றியுள்ள 9 நவக்கிரகங்கள் சூரியன் திருத்தலம் திருமங்கலக்குடி, சந்திரன் திருத்தலம் திங்களூர், செவ்வாய் திருத்தலம் வைத்தீஸ்வரன்கோவில், புதன் திருத்தலம் திருவெண்காடு, குரு திருத்தலம் ஆலங்குடி, சுக்கிரன் திருத்தலம் கஞ்சனூர், சனி திருத்தலம் திருநள்ளாறு, ராகு திருத்தலம் திருநாகேஸ்வரம், கேது திருத்தலம் கீழப்பெரும்பள்ளம் ஆகிய 9 கோயில்களுக்கும் ஒரே நாளில் கும்பகோணத்திலிருந்து புறப்பட்டு, திரும்பி கும்பகோணம் வந்து சேர்கின்ற இந்த ஏற்பாட்டை, பேருந்து வசதியோடு உணவு வசதிகளும் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டு, இன்று ஆன்மிக மக்களுக்கு சுற்றுலா வசதி செய்து, பிரம்மாண்டமாக போற்றுகிற நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தநேரத்தில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய சிறப்புகளைக் கொண்ட கும்பகோணம் மாவட்டம், தலைமையிடமாக வர வேண்டியது மிகவும் அவசியம். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்களைத் தவிர ஒன்றிய, மாநில அரசுகளின் அனைத்து மாவட்ட தலைமை அலுவலகங்களும் கும்பகோணத்தில் அமைந்திருக்கின்றன. எனவே, மாவட்ட தலைநகரமாககும்பகோணத்தை அறிவித்தால், அரசுக்கு செலவு மற்றும் நிதிச் சுமை குறைவு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகளிலேயே, கும்பகோணம் மாநகராட்சியைத் தவிர மற்ற 20 மாநகராட்சியும் மாவட்ட தலைநகரத்தில் தான் அமைந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் தேர்தலுக்கு முன்னரே கும்பகோணத்தை தலைமையிடமாக உருவாக்கப்படும் என்று உறுதியளித்திருக்கிறார். எங்கள் அருமைத் தலைவர், சமூக நீதிக்கான சரித்திர நாயகர், முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் தேர்தலின்போது உறுதியளித்தபடி கும்பகோணம் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை, இருந்து வரும் புராண சிறப்புகள், வரலாற்று சிறப்புகள் மற்றும் இலக்கிய சிறப்புகள், மிக்க வணிக மையமான எங்கள் கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

### நெடுஞ்சாலைத்துறை

அதே நேரத்தில், நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரை 1946 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளையும் சார்ந்த அனைத்துப் பிரிவு மக்களும் சமநிலையான சமூக பொருளாதார மேம்பாட்டை அடையச் செய்வதையே நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் நெடுஞ்சாலைத் துறை.

சாலை வலைப் பின்னல் அமைப்பின் அடிப்படையில், கிராமச் சாலைகளை நகரச் சாலைகளுடன் இணைப்பது, நகரச் சாலைகளை மாநகரச் சாலைகளுடன் இணைப்பது, மாநகர சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைப்பது என கடைகோடி மக்களும் பயன்பெறும் வகையில் புதிய, புதிய சாலைகளை ஏற்படுத்தியது இந்தத் துறை.

இந்த இணைப்புச் சாலைகளில் விவசாயிகள் உற்பத்திச் செய்த வேளாண் விளைப் பொருட்களை கொண்டு செல்லவும், வணிகர்கள் தங்கள் வணிகப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும், தொழில் வளர்ச்சிகளுக்கும், தொழிற்சாலைகளில் உருவாக்கப்படும் கனரக பொருட்களை கொண்டு செல்வதற்கும், அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதற்கும், மக்களுடைய பேருந்து பயணத்திற்கும், இன்னும் பிற பயன்பாட்டிற்கும் ஆதாரமாக உள்ளது முதலமைச்சருடைய சாலை மேம்பாட்டுத் திட்டம். தமிழ்நாட்டினுடைய மாவட்ட தலைநகரங்களையும், தாலுகா தலைமை நகரங்களையும் இணைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள மிக முக்கியமான திட்டம் ஆகும்.

இத்திட்டத்தில் 2,200 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளை, நான்கு வழி சாலைகளாக மேம்படுத்துவதை இலக்காக கொண்டுள்ளது. அதேபோல, 6,700 கிலோ மீட்டர் நீள சாலைகளை இரண்டு வழித்தட சாலைகளாக மாற்றிடவும், இலக்குகளை நிறைவேற்றிட பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், விக்கிரவாண்டி - தஞ்சாவூர் மாநில நெடுஞ்சாலையினை, தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட வேண்டுமென்று கூறி, ஒன்றிய அரசு மூலமாக நிறைவேற்ற பாடுபடுவேன் என்று சொன்னார். அன்றையதினம் நமது மரியாதைக்குரிய டி.ஆர். பாலு அவர்கள், அமைச்சராக இருந்தபோது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய அறிவிப்பை விக்கிர வாண்டி தஞ்சாவூர் மாநில நெடுஞ்சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தி அறிவித்தார்கள். இன்று 19 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் அந்த தேசிய நெடுஞ்சாலை பணிகள் முற்றிலும் நிறைவு பெறவில்லை. சில பகுதிகளில் ஆமை வேகத்தில் அந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பணிகள் முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்னும் பணிகள் முடியவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். தற்போது, சிறப்புக் கவனம் செலுத்தி ஒன்றிய அரசினை வலியுறுத்தி விக்கிரவாண்டி கும்பகோணம்தஞ்சாவூர் சாலை பணியினை விரைந்து முடித்து கொடுத்து, எங்கள் பகுதி மக்கள் பயன் பெறுகின்ற வகையில் வழிவகுக்குமாறு இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கடந்த 1.1.2000 அன்று குமரி முனையில் 133 அடி உயரமுள்ள ஐயன் சிலையை திறந்து வைத்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அந்த பிரம்மாண்டமான சிலை அமைந்துள்ள பாறையையும், சுவாமி விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கடல் பாலம் ஒன்றை ஒன்றிய அரசின் SagarMala திட்டத்தின்கீழ் 50 சதவிகித நிதியுதவி பெற்று ரூ.37 கோடியில் நிறைவேற்றி வருகிறார்கள். சுற்றுலா பயணிகளை பெரிதும் கவரப் போகும் அந்த கடல் பால பணிகளை விரைவில் முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக ஒரு அரசு திட்டங்களை கொண்டு வருவது, அதனை செயல்படுத்துவது, குறைந்த கால திட்டம், நீண்ட கால திட்டம் என்று பல திட்டங்களை தீட்டுவது உள்ளது. 1989 ல் கும்பகோணம் தொகுதியில் தராசுரம் புற வழிச் சாலை ஒன்று அமைக்கப்படுவதற்கு பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. பாபராஜபுரம்ஏரகரம்பெரும்பாண்டிகொரநாட்டுக்கருப்பூர்உள்ளூர் வழியாக என் ஊரான சாக்கோட்டை வரை அந்தப் பணிகள் முடிந்தது. இதன் தொடர்ச்சியாக சாக்கோட்டையிலிருந்து, மருதாநல்லூர்அண்ணலக்ரஹாரம்கொருக்கைபம்பப்படையூர்தாராசுரம் வரை மீதமுள்ள பணிகள் இன்னும் 35 ஆண்டுகள் (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

கணக்கு பார்த்தோமேயானால் ஒரு மகாமகத்திற்கு 12 ஆண்டுகள், மூன்று மகாமகம் 36 ஆண்டுகள் இன்றைக்கு ஒரு பணிகள் தாமதாக இருக்கிறது என்று சொன்னால், அது கும்பகோணம் புறவழிச் சாலை. இதனை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அமைச்சர் அவர்கள் அதனை விரைவாக முடித்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கோரிக்கையாக வைக்கிறேன். கும்ப கோணம் மதனூத்தூர் சாலையில் கொள்ளிடம் ஆற்று பாலம் 7.5 மீட்டர் அகலத்தில் கட்டப்பட்டது. ஆனால், கும்பகோணம் நீலத்த நல்லூர் சாலையானது 5.5 மீட்டர் அகலத்தில் குறைந்திருக்கிறது. இந்தச் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. கும்ப கோணம் நீலத்தநல்லூர் சாலையை 7 மீட்டர் அளவில் நீங்கள் சாலையை அகலப்படுத்தி தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், சென்னை பிராதன சாலைக்கு மாற்று சாலையாக இந்த நீலத்தநல்லூர் சாலை இருக்கிறது என்பதை மாண்பிற்கினிய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு செல்கிறேன். அதைப்போன்று, கும்ப கோணத்தில் பாலக்கரை பகுதியில் மிகப் பெரிய நெருக்கடி. . .

நான்கு வழிப் பாதைகளில் ஏற்படுகிற நெருக்கடியை, நம்முடைய அமைச்சர் அவர்களை அழைத்துச் சென்று, ஏற்கெனவே அந்த இடத்தை காண்பித்து, அதனை ஒரு புறவழிச் சாலையாக 900 மீட்டரில் ரூ.24 கோடி செலவில் செய்வதாக அன்றைக்கு சொன்னார்கள். அது கருத்துருவில் இருக்குமென்று நான் கருதுகிறேன்.

முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சாக்கோட்டை அன்பழகன் பேசினார்.





கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து காணை தெற்கு ஒன்றியம் காணை ஊராட்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமா என்.கௌதமன் வாக்கு சேகரித்தார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் கௌதமசிகாமணி, நாகை மாவட்டத்தை சேர்ந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், மகா.குமார், சிக்கல் என்.ஆனந்த் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேப்பாக்கம் கே.எஸ்.பாண்டியன்
### ஜூன் 30 (2015)



கழகம் துவங்கிய காலத்திலேயே அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளராக, ஆயிரம்விளக்கு பகுதி துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**